8th December 1961]

(இ) & (உ) None have lost their jobs on account of the winding up of the State Broadcasting Department. Most of the staff have been absorbed in the new Panchayat Maintenance Organisation or retained in the residuary set up under the P.W.D. The staff rendered surplus have been allotted to the Industries, Food Production, Technical Education and other branches of Public Works Department.

SRI S. M. ANNAMALAI : அப்படிக் கலைப்பதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல முடியுமா ? பணம் அதிகமாக ஆகிறது என்ற காரணமா ? பணம் அதிகமாக ஆகவில்லை என்றால் அதைக் கலைப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட் மெண்டில் ஏற்கனவே அதிகமாக செலவாகிறது. மேலும் அதிக மாக செலவு ஆகக் கூடாது என்பதற்காகத்தான், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களை அமைத்து அங்கு ரேடியோக்கள் அமைக்கப்பட்டிருப்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் இதைப்பற்றி கவனிக்கலாம். அதற்காகத் தான் இப்படிப்பட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தந்த கிராமங் களில் அமைக்கப்பட்டிருக்கிற ரேடியோ செட்டுகள் ஆகைப் பற்றி கவனித்துக் கொள்ளலாம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பணம் செலவாவதைப்பற்றி தனிக்கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்லலாம்.

District Headquarters Hospital (Phone system)

* 2193 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு வார்டிலும் Internal Phone System ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : இப்பொழுது போதுமான அளவுக்குமேல் அங்கேயெல்லாம் நர்சுகள், டாக்டர்கள், சிப்பந்தி கள் வேலை செய்து கொண்டிருப்பதாலும் இப்படிப்பட்ட பெரிய ஆஸ்பத்திரிகளில் அதாவது ஹெட் க்வார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் அடிக்கடி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் இதுபோன்ற வசதி இருப்பது அவசியமாக இருக்கிறது. மேலும் மேலும் அதிக மாக நோயாளிகள் வரக்கூடிய காரணத்தால் ஆவது இப்படிப் பட்ட போன் சிஸ்டத்தை ஏற்படுத்துவதற்கு மேலும் தீவிரமாக ஆலோசனை செய்து அதை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப் படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது அந்த போன் சிஸ்டம் இல்லாமல் அதிக கஷ்டமாக இல்லை. முக்கியமாக

[8th December 1961

கவனிக்க வேண்டியது படுக்கைகள்தான், அதை அதிகப்படுத்துவதுதான் முக்கியம். அதில்தான் கவனம் செலுத்தவேண்டுமே தவிர இதைப் போன்ற லக்ஷரி விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டியதில்லை. அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

Inspectors (Hindu Religious and Endowments Department)

* 2194 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹிந்துமத பரிபாலன இலாகா இன்ஸ்பெக்டர்கள் ஒவ்வொருவருக்கும் எத்தனை கோவில்களை மேற்பார்வை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது ?

(இ) எத்தனை தாலூகாக்கள் ஒவ்வொரு இன்ஸ்பெக்டர் பார்வையில் இருக்கின்றன ?

(உ) அவர்களுக்குக் கொடுக்கப்படும் நிர்ணயித்த பிரயாணப் படி போதுமானதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) and (இ) A statement[a] is laid on the table of the House.

(உ) Yes.

Roads (North Arcot district)

* 2195 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் பொது மராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் 1960, 1961-ம் ஆண்டுகளில் பெருவழித் துறையினரால் எத்தனை ரோடுகள் போடப்பட்டன ?

(இ) இவைகளுக்கு டெண்டர் கேட்கப்பட்டதா ?

(உ) டெண்டர் இல்லாமல் விடப்பட்ட வேலைகள் எத்தனை ? காரணங்கள் என்ன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) to (உ) Eight road works in North Arcot District were executed during 1960–61 by calling for tenders. Another work viz., the work of forming a road to Yelagiri Hills is being done through piece workers without calling for tenders, by splitting up the work into parts. No work was dropped in the district in 1960–61 for want of response to tender call.

SRI S. M. ANNAMALAI : ஸார், பொதுவாக குறைந்த டெண்டர்கள் கொடுத்தவர்களுக்குக் கொடுக்காமல் அதிகப் படியான டெண்டர் கொடுத்தவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதைக் குறித்து சர்க்கார் ஏதாவது பரிசீலனை செய்தார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பொதுவாக குறைந்த டெண்டர் கொடுத்தவர்களுக்குத்தான் கொடுக்கப்படுவது வழக்கம். அதுவுமல்லாமல் ரொம்ப நாட்கள் வேலை செய்து கொண்டிருக்காமல் குறைந்த நாளில் வேலையை முடிக்கக்கூடியவர்களுக்கும்தான்

[a] Printed as Appendix III on pages 250–254 infra.